Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 17 2025

திங்கட்கிழமை 17, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 160 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## வெப்பநிலை தொடர்பில் எச்சரிக்கை

தற்போது நிலவும் வறண்ட வானிலை மேலும் தொடரக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கொழும்பில் 28 செல்சியஸாக இருக்க வேண்டிய வெப்பநிலை தற்போது 31 செல்சியஸாக உயர்ந்துள்ளது.

இந்த அதிக வெப்பநிலை மக்களின் அன்றாட நடவடிக்கைகளைப் பாதிப்பதாக அமைந்துள்ளதுடன், அது குறித்து தற்போதைய சூழ்நிலையில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்

# கன்னி பாதீடு இன்று



**2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன**

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு- செலவுத் திட்டம், (பாதீடு) பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் இன்று (17) திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு முன்வைக்கப்படவுள்ளது. 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு-செலவுத்திட்ட உரையை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நிகழ்த்துவார். அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மக்கள் கலரி, சபாநாயகர் களரி என அனைத்து கலரிகளும் பாராளுமன்ற வளாகம் மற்றும் பாராளுமன்ற அறைகளும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## இராணுவ வீரர்களுக்கு விசேட அறிவிப்பு



வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் அமைதி காக்கும் பணிகளை விரைவு படுத்துவதற்காக, இராணுவ மேஜர் பதவிக்கு கீழே உள்ள அனைத்து வீரர்களின் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை அந்தந்த படைப் பிரிவுகளிடம் ஒப்படைக்குமாறு இராணுவத் தலைமையகம் அனைத்து படைப்பிரிவு கட்டளை அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு

தொடர்ச்சி P2



## இன்று காலை விசேட அமைச்சரவைக் கூட்டம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், இன்று திங்கட்கிழமை (17) காலை, ஜனாதிபதி செயலகத்தில் விசேட அமைச்சரவைக் கூட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் இன்று திங்கட்கிழமை (17) காலை, 10.30 மணியளவில், 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள், நிதியமைச்சர் என்றவகையில்

தொடர்ச்சி P2



## சுமந்திரன், சாணக்கியனுக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

அம்பாறை- பெரியநீலாவணையில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலைக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை (16) பொதுமக்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்திற்கு சென்ற ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## வின்னேஸ்வரம் மனைவியுடன் கைது

பல பொலிஸ் நிலையங்களால் விசாரிக்கப்பட்டு வரும் பல துப்பாக்கிச் சூடு முயற்சி, துப்பாக்கிகளை வைத்திருத்தல் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பாகத் தேடப்படும் ஒரு சந்தேக நபர், குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் குழுவினால் ஞாயிற்றுக்கிழமை (16) அதிகாலை

தொடர்ச்சி P2




## நாட்டின் பொருளாதார உற்பத்திக்கு பாரிய சிக்கல்

நாட்டிலுள்ள திறமையான தொழிலாளர்கள் வெளியேறுவதால் ஏற்படும் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தியில் பின்னடைவு ஏற்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டிற்கான அதன் முதல் நாணயக் கொள்கை அறிக்கையை வெளியிட்டு மத்திய வங்கி இதனைக் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகத் தொழிலாளர்கள் பெருமளவில் வெளியேறுவதும், நிபுணர்களின் இடம்பெயர்வு காரணமாக அனுபவம் வாய்ந்த பணியாளர்களை இழப்பதும் வணிகங்களில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும்.

தொடர்ச்சி P2

## அனைத்தும் எதிரணியின் பிரசாரம்



நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டமை தொடர்பாக பல விமர்சனங்கள் தெரிவிக்கிப்படுகின்றன. அவை அனைத்தும் எதிரணியின் பிரசாரமே தவிர அதில் உண்மையில்லை என விவசாய காணி, நீர்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் சனிக்கிழமை (15) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2





## பட்ஜெட்டின் இறுதி வரைவை பார்வையிட்டார் ஜனாதிபதி

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வரைவை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இன்று ஞாயிற்றுக்கிழமை (16) ஜனாதிபதி அலுவலகத்தில் பார்வையிட்டுள்ளார். இதன்போது, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும் இணைந்து கொண்டுள்ளார்.



“தேர்தலை பிற்போடுமாறு

## எதிர்க்கட்சிகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை”

உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போடுமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அரலகங்வில மகாவலி கலையரங்கில் வெள்ளிக்கிழமை(14) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தொடர்ச்சி P2

## பாதிக்கப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை

**உங்களுக்காகக் கட்டப்படும் வீடுகளுக்கு நீங்களும் உதவி செய்ய வேண்டும்**

நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டத்தில் மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கி, அரசியல் ரீதியாக இன்றி, வீடுகள் வழங்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கே.வி.சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர்



உரையாற்றுகையில்,

“நாம் இந்த வீடுகளை அரசியல் பார்த்து வழங்குவதில்லை. எதிர்காலத்தில் அரசியல் பார்த்து நாங்கள் வேலை செய்யப் போவதும் இல்லை.

தொடர்ச்சி P2

## IMF வுடன் இன்று பேச்சு

**நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 333 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கும்**

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் விடயத்தை மாற்றியமைக்க சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியுள்ள அரசாங்கம், அரச நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் திங்கட்கிழமை(17) சமர்பிக்கவுள்ளது

இதன் பின்னர் மேற்குறிப்பிட்ட கோரிக்கைக்கு சர்வதேச நாணய நிதியம், இருதரப்பு கலந்துரையாடல்களை முன்னெடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்




2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட உள்ளதுடன், மார்ச் மாதம் 21ஆம் திகதி வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சி P2

## சீன அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம்



ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நல்லிணக்கம் மற்றும் இன விவகாரங்களுக்கான சீன அமைச்சர் பான் யூ தலைமையிலான உயர்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்

# கன்னி பாதீடு இன்று

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி, அவர்களின் உறவினர்கள், இராஜதந்திரிகள், ஏனைய விருந்தினர்கள், பார்வையாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு பிரத்தியேக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது (கன்னி) வரவு- செலவுத் திட்டம் என்பதால், சாதாரண மக்கள் மட்டுமன்றி, பல தரப்புகளைச் சேர்ந்தவர்கள் பெரும் எதிர்பார்ப்பில் இருக்கின்றனர்.

சம்பள அதிகரிப்பு, நிவாரண அதிகரிப்பு, வரப்பிரசாதங்கள், விலை குறைப்பு, வரிகளில் மறுசீரமைப்பு உள்ளிட்டவை நிகழும் என்று பலரும் எதிர்பார்த்து நிற்கின்றனர். எனினும், எவ்விதமான தகவல்களும் கசியவில்லை.

2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட உரையைத் தொடர்ந்து ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதம் (வரவு-செலவுத் திட்ட விவாதம்) 2025 பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

2025 ஜனவரி 09ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை ஏழு நாட்கள் இடம்பெறவுள்ளது. அத்துடன் பெப்ரவரி 25ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழு நிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

வரவு-செலவுத் திட்ட காலப்பகுதியில் மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டு இருப்பதுடன், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரையான காலப் பகுதியில் வரவு- செலவுத் திட்ட விவாதம் இடம்பெறும்.

வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திகதிகள் தவிர, ஏனைய அனைத்து நாட்களிலும் பி.ப. 6.00 மணி முதல் பி.ப 6.30 மணி வரையான காலப்பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.

## இன்று காலை விசேட அமைச்சரவைக் கூட்டம்

ஜனாதிபதியால் முன்வைக்கப்படவுள்ளன.

இந்நிலையில், அந்த வரவு- செலவுத் திட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கிகாரத்தை பெற்றுக்கொள்ளும் வகையிலேயே இந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## வெப்பநிலை தொடர்பில் எச்சரிக்கை

அதிக வெப்பநிலை காரணமாக உடல் வியர்வையாக நீர் மற்றும் உப்புகளை இழக்கிறது, இது ஆரோக்கியமான நபர்களுக்கு கூட நீரிழப்பை ஏற்படுத்தும் என்று சுகாதார பிரிவு சுட்டிக்காட்டுகின்றது.

இந்த நாட்களில் வெளியில் வேலை செய்பவர்கள், குறிப்பாக வீதிகளில் வேலை செய்பவர்கள் மற்றும் நெல் வயல்களில் வேலை செய்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடுமையான நீரிழப்பு இதயத்தையும் மூளையையும் பாதிப்பதுட்ன, இது வெப்ப பக்கவாதம் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த நிலைமைகளைத் தவிர்க்க, அதிக தண்ணீர் குடிக்க வேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## வின்னேஸ்வரம்...

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் வெளிநாட்டில் இருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, இலங்கை பொலிஸாரின் வேண்டுகோளின் பேரில் இந்நாட்டுக்கு நாடு கடத்தப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை (16) அன்று அவர் இலங்கைக்கு வந்தவுடன், சந்தேக நபரும் அவரது 25 வயது மனைவியும் கைது செய்யப்பட்டுக் குற்றப் புலனாய்வுத் துறையின் விமான நிலையப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளானர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஜம்பட்டா தெரு, கொழும்பு 15 சேர்ந்த 30 வயதுடைய புஷ்பராஜ் வின்னேஸ்வரம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21.04.2022 அன்று கடலோர காவல் பிரிவில் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயற்சி (இந்த குற்றத்திற்காக நீதிமன்றத்தால் திறந்த வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.)

கடந்த 06.01.2018 அன்று கொழும்பு குற்றப்பிரிவால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ரிவால்வர் துப்பாக்கியை வைத்திருந்தது.

கடந்த 25.03.2017 அன்று கொட்டஹேன பொலிஸ் பிரிவில் கஞ்சா வைத்திருந்தது.

கொட்டஹேன பொலிஸ் பிரிவில் பல சந்தர்ப்பங்களில் ஹெரோயின் வைத்திருந்தமை. மேலும், இந்த சந்தேக நபர் சூதாட்டம் மற்றும் துப்பாக்கிகளை வைத்திருத்தல் ஆகிய குற்றங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஒரு நபராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் அவரது மனைவியும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

மேலும், குற்றப் புலனாய்வுத் துறையினரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சுமந்திரன், சாணக்கியனுக்கு...

பெரியநீலாவணை பகுதியில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையினை மூடுமாறு வலியுறுத்தி பெரியநீலாவனை பகுதியில் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போராட்டம் நடைபெறும் பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை(16) பாராளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன், இராசாணக்கியன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.கே.சுமந்திரன் ஆகியோர் சென்று போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினார்கள்.

இதன்போது குறித்த பகுதியில் சிலர் பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

## நாட்டின் பொருளாதார...

இது உற்பத்தித்திறனில் தொடர்ச்சியான சரிவுக்கு வழிவகுக்கும் எனவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

உள்நாட்டிலும் உலக அளவிலும் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் போக்குகளைக் கருத்தில் கொண்டு, பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி முன்னறிவிப்புகளுக்கான அபாயங்கள் குறித்த மதிப்பீட்டை இந்த அறிக்கை முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி குறிப்பிடுகிறது.

அதன்படி, தொழில்துறை உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், மின்சார உற்பத்தி போன்ற துறைகள் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபோன்ற நிகழ்வுகள் நடுத்தர காலத்தில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என மத்திய வங்கியின் நாணய கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சீன அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம்

மட்ட குழுவினர் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்டவர்களை சந்திக்க உள்ளதுடன், கண்டி மற்றும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சீன அமைச்சர் பான் யூ, இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், இன நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளார்.

குறிப்பாக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார மற்றும் புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி உள்ளிட்ட அதிகாரிகளுடன் சீன தரப்பு விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுக்க உள்ளனர்.

இதேவேளை, கண்டியில் தலதா மாளிகைக்கு செல்லவுள்ள சீன குழுவினர், யாழ்ப்பாணத்திற்கும் அமைச்சர் பான் யூ தலைமையிலான குழுவினர் செல்லவுள்ளனர்.

அண்மைக் காலமாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சீனாவின் ஆதரவு திட்டங்கள் வலுப்பெற்று வருகின்ற நிலையில், இலங்கைக்கு விஜயம் செய்யும் சீன அமைச்சர் பான் யூ தலைமையிலான உயர் மட்ட குழு, மூன்று தசாப்த கால உள்நாட்டு போருக்கு காரணமான தமிழ் மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## IMF வுடன் இன்று பேச்சு

குறித்த வரவு - செலவுத் திட்டமானது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வகையில் முன்வைக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மறுபுறம் இந்த வரவு - செலவுத் திட்டமானது சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும் என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி இலங்கையில், சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வு குறித்து பணியாளர் மட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பிரகாரம், நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 333 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டுகின்றது.

இந்த நிதியுதவிக்கான மேலதிக உறுதிப்பாடல்களுக்கான கலந்துரையாடல்கள் எதிர்வரும் வாரங்களில் நடைபெற உள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டின் நான்காவது - மூன்றாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 5.5 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதுடன், அதே ஆண்டின் நான்காவது காலாண்டில் சராசரி பணவீக்கம் இலக்கை விட மிகவும் குறைவாகவே உள்ளது.

அத்துடன், 2024ஆம் ஆண்டின் இறுதியில் சர்வதேச இருப்புக்கள் 6.1 பில்லியனாக அதிகரித்துள்ளது.

## இராணுவ வீரர்களுக்கு விசேட அறிவிப்பு

வெளிநாட்டுக்கு செல்கின்றனர். அதனை தடுக்கும் விதமாக இந்த நடவடிக்கை இருக்கும் என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்துள்ளார்.

பல இராணுவ வீரர்களின் கடவுச்சீட்டுகள் காணாமல் போயுள்ளதாகவும், அத்தகைய கடவுச்சீட்டுகள் மூன்றாம் தரப்பினரின் கைகளுக்கு செல்லும் ஆபத்து குறையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பல இராணுவ வீரர்கள் தூர இடங்களுக்கு சென்று கடைமைகளில் ஈடுபடும் நிலையில், திடீரென பயிற்சிக்காக அல்லது அமைதி காக்கும் பணிகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பும் போது, ஏற்படும் சிக்கலை தடுப்பதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பாதுகாப்பாக வைத்திருப்பதும் படைப் பிரிவு தளபதிகளின் பொறுப்பு எனவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், படையினரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக, பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலுடன் எந்த நேரத்திலும் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அனைத்தும்...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது அரசு நிர்ணயித்துள்ள விலையை விட அதிக விலை கொடுத்து தனியார் துறையினர் கொள்வனவு செய்வது விவசாயின் பக்கம் சரியானது.

அவர்களுக்கு அதிக விலை கிடைக்கிறது. எனவே, விவசாயிகள் சார்பாக எந்தப்பாதிப்பும் இல்லை. அவர்களுக்கு நன்மையே கிடைத்துள்ளது.

ஆனால், எதிர்காலத்தில் இதனால் பாவனையாளர்கள் அல்லது நுகர்வோர் பாதிப்படையாது நாம் பார்த்துக் கொள்வோம்.

தற்போது தான் படிப்படியாக அறுவடை ஆரம்பித்துள்ளது. அடுத்தமாதம் அளவில்தான் முறையான அறுவடை ஆரம்பிக்கும்.

காலத்திற்கு முன் பயிர்ச்செய்கை செய்த சில விவசாயிகளே தற்போது அறுவடை செய்கின்றனர். இது மிகவும் குறைந்த அளவாகும்.

அடுத்த மாதம் அளவில் ஏனைய பகுதிகளில் அறுவடைகள் மேற்கொள்ளும் போது அரச நெற் களஞ்சியங்களுக்கு நெல் கிடைக்க வாய்ப்பு உண்டு.

நெற் கொள்வனவிற்கு போதியளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. விலையும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில வாரங்களில் அறுவடை ஆரம்பிக்கும். அரச நெற்களஞ்சியங்கள் தயார் நிலையில் உள்ளன விலையேற்றம் எனலாம்.

குரங்குகள் மற்றும் வன விலங்குகளால் பயிர்களுக்கு சேதம் ஏற்படுகிறது. குரங்குகளைப் பிடித்து திட்டமிட்டபடி அப்புறப்படுத்த சில பிரச்சினைகள் உள்ளன.

இது ஒரு சிக்கலான பிரச்சினையாகும். முதலில் குரங்குகளை பிடிக்க வேண்டும். அவற்றுக்கு சத்திர சிகிட்சை செய்ய வேண்டும். கூடுகள் அமைக்கப்பட வேண்டும்.

அவற்றை கொண்டுபோய்ச் சேர்க்க இடம் தேடவேண்டும். இப்படி பல்வேறு பட்ட பிரச்சினைகள் உள்ளன. இவை எல்லாவற்றிற்கும் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

ஆளணிகள் அமைக்கப்பட வேண்டும். எனவே அவை ஓரிரு இரவுகளில் தீர்க்க முடியாது. சிறிது காலம் எடுக்கும். எனவே பிரச்சினை ஒன்றும் கிடையாது.

காய்கறி விலையேற்றம் பற்றி ஊடக வியலாளர் ஒருவரால் கேட்கப்பட்டபோது அதற்குப் பதில் அளித்த அமைச்சர் குறிப்பிட்டதாவது,

எப்போதும் ஒரு பருவத்தில் விலையேற்றம் உண்டு. அதாவது சிலகாலத்திற்கு சில பொருட்களின் விலை அதிகரிப்பதுண்டு.

இப்போது பொதுவாக காய்கறிகளின் விலை அதிகரித்துக் காணபட்டாலும் தக்காளி போன்றவற்றின் விலை உயரவில்லை. பொதுவாக அதிகரிப்பதாயின் தக்காளி விலையும் அதிகரிக்க வேண்டும். அப்படி இல்லையே. தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளது.

எனவே விலை குறைந்துள்ளது. ஏனையவற்றின் விலை ஏற்றம் காணப்பட உற்பத்தி குறைவு அல்லது அதுபோன்ற காரணங்கள் இருக்கலாம்.இதனை பருவ விலையேற்றம் என்போம். அதாவது ஒரு பருவத்தில் கூடும், மற்றொரு பருவத்தில் குறையும். அப்படியான ஒன்று இதுவாகும் என்றார்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கே...

இது ஒரு பொதுச் சேவை. இது அரசாங்கம் செய்யும் சேவை. இது எங்களது பொறுப்பு.இவை நாங்கள் எமது கடமைகள் எனக் கருதிச் செய்யும் பணிகள்.

அதனால் கடந்த கால வரலாற்றில் வீடுகள் வழங்கியது போல வீடுகளை வழங்குவதில்லை. இம்முறை 5,400 பேரையும் தெரிவு செய்ய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளோம். தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின் அடிப்படையில், வழங்கப்பட வேண்டும். அதிக மண்சரிவுக்கு உட்படும் பகுதி என குறிப்பிடப்படுமாயின் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். அந்த வீடுகளை இந்த வருடம் விரைவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கிறோம்.

அரசாங்க தரப்பினருக்கு தான் இந்த வீடுகளை நிர்மாணிக்கும் பொறுப்பை வழங்குவோம். இராணுவத்தினருக்கு இவற்றை வழங்குவோம். அந்த இராணுவத்தினருக்கு இதற்கான மேலதிக கொடுப்பனவு வழங்கப்படாது. அவர்களும் இந்த நாட்டையும், உங்களையும் கருத்திற்கொண்ட செயற்படுவார்கள்.

நிர்மாணிக்கப்படும் வீடுகள் இராணுவத்தினருக்கானது இல்லை. நான் இந்த வீட்டில் வந்து வசிக்கப் போவதும் இல்லை. உங்களுக்காகக் கட்டப்படும் வீடுகளைக் கட்டுவதற்கு நீங்களும் உதவி செய்ய வேண்டும். 28 இலட்சத்தில் வீடுகளைக் கட்ட முடியாது. அதனால் நீங்கள் உதவி செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

நானும் உங்களோடு வேலை செய்ய வருவேன். அரை நாள் சரி உங்களோடு நானும் வேலை செய்வேன். எமக்கான இடத்தை நிர்மாணிக்கிறோம் என்ற உணர்வில் தரமாக நிர்மாணித்திட உதவி செய்ய வேண்டும்” என்றார்.

## எதிர்க்கட்சிகள் ஆணைக்குழுவிடம்...

இந்த அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட, மக்களால் பாதுகாக்கப்படும் அரசாங்கம், நாட்டில் மாற்றத்தை எதிர்பார்த்து மக்கள் கடந்த தேர்தலில் இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தனர். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எமது அரசுக்கு உள்ளது. அதற்காக அனைத்து துறைகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தரவுகளின் அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

இந்த நாட்டின் பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்க அரசு சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கு கணிசமான பங்களிப்பை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னைய அரசுகளின் கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகளில் ஆசிரியர்களுக்கான சரியான திட்டம் இருக்கவில்லை. ஆசிரியர்களின் மனப்பான்மையை வளர்ப்பதிலும், ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களின் தொழில் திறனை மேம்படுத்துவதிலும், நவீன கல்வி அறிவை அவர்களுக்கு வழங்குவதில் எமது அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது.

இதுவரை காலமும் அரசியல் செல்வாக்கு காரணமாகவே ஆசிரியர்கள், அதிபர்கள், நியமனங்கள், இடமாற்றங்கள் இடம்பெற்று வந்தன. அந்த நிலை மீண்டும் ஏற்படாது. இன்று அரச அதிகாரிகள் அரசியல் செல்வாக்கு இன்றி மகிழ்ச்சியுடன் கடமையாற்றி வருகின்றனர்.

ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் என ஏராளமான வெற்றிடங்கள் உள்ளன. சில இடமாற்றங்கள் முறையாக நடைபெற்றிருக்கவில்லை. இவற்றுக்கு தீர்வு காணப்பட்டு எதிர்காலத்தில் அனைத்து பாடங்களுக்கும் ஆசிரியர்கள் பாடசலைகளுக்கு வழங்கப்படுவர்.

நான் குறிப்பாக பொலன்னறுவை மாவட்டத்திற்கு இந்த பிரதேசத்தின் கல்வி நிலைமையை அறிந்து கொள்வதற்காக வந்தேன். சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லை. உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. ஆனால், பொலன்னறுவை நகருக்குச் செல்லும் போது, பல வசதிபடைத்த பாரிய கட்டிடங்கள் உள்ளன. பொலன்னறுவையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு சுமார் ஆறாயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஆனால், பாடசாலை மாணவர்களுக்கு முறையான கழிப்பறை வசதிகள் கூட செய்துகொடுக்கப்படவில்லை. இந்நிலை மாற வேண்டும். 2026ஆம் ஆண்டில் நாம் மேற்கொள்ளவிருக்கும் கல்விச் சீர்திருத்தங்களின் ஊடாக, இந்நாட்டின் சகல பிள்ளைகளும் எதிர்காலத்தில் நம்பிக்கை வைக்கக்கூடிய திறன்களுடனும் பலத்துடனும் சமூகத்தில் பிரவேசிக்கும் கல்வி முறையை நாட்டில் உருவாக்குவோம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

# பிரதமர் ஹரிணி பங்கேற்ற யாழ். கூட்டத்தில் பதற்றம்

யாழ்ப்பாணத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய பங்கேற்ற கூட்டமொன்றில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

விடுவிக்கப்படாத வலிகாமம் வடக்கு காணிகள் தொடர்பாகக் காணி உரிமையாளர்கள் பிரதமரிடம் கேள்வி எழுப்பியதால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

உடுவில் தொகுதி மக்கள் சந்திப்பு ஏழாலை ஏழு கோவிலடியில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் சனிக்கிழமை (15) மாலை மக்கள் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அங்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் உரையாற்றியுள்ளார்.

இதன்போது, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம், காணமலாக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்டவை தொடர்பாகப் பிரதமர் எதுவும் தெரிவிக்கவில்லை என காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறு பிரதமர் உரையாற்றிய பின்னர் மேடையிலிருந்து இறங்கி மக்களைச் சந்திக்க சென்றபோது, காணி உரிமையாளரொருவர் பலாலி பகுதியில் காணிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது தொடர்பாக தமது ஆதங்கத்தைப் பிரதமரிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளதுடன், உங்கள் அரசியலுக்காக எங்களைப் பயன்படுத்த வேண்டாம் எனக் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமரைச் சூழ்ந்திருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த காணி உரிமையாளரை அங்கிருந்து வெளியேற்ற முயற்சித்தபோது அங்குப் பதற்றமான சூழல் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.

இதனையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகளால் பிரதமர் ஹரிணி அமரசூரிய அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.





## நூலகத் திறப்பு விழா...

யாழ்ப்பாணம் – கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புனரமைக்கப்பட்ட நூலகத் திறப்பு விழா கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் சனிக்கிழமை (15) இடம்பெற்றது.

1923ஆம் ஆண்டு அரச ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாக நிறுவப்பட்ட இந்தக் கலாசாலை 2023ஆம் ஆண்டு 100 ஆண்டுகளை நிறைவு செய்தது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர்,

"கல்வி சீர்திருத்தத்தில் ஆசிரியர்கள் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. கல்வி என்பது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான சிறந்ததும் வலுவானதுமான உறவாக இருக்க வேண்டும். இந்த மாற்றம் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிர்வாக உத்தியோகத்தர்களின் பலத்துடன் நிகழ வேண்டும். எமது அரசாங்கத்தின் கீழ், ஆசிரியர் கல்விக்கு விசேட கவனம் செலுத்தப்படுகிறது. ஆசிரியர்களின் பயிற்சி செயன்முறை நெறிப்படுத்தப்பட்டு திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும். இப்பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளக் கல்விப் பேரவையொன்றையும் அறிமுகப்படுத்த உள்ளோம். அதன் மூலம் கல்வித்துறையின் தரத்தை உயர்த்தி அதை முகாமைத்துவம் செய்ய முடியும். எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். அது உங்களுக்கு நல்ல செய்தியாக இருக்கும்" என தெரிவித்துள்ளார்.

இங்குப் பிரதமர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விசேட அதிதிகள் நினைவுக் குறிப்பேட்டில் குறிப்பொன்றையும் பதிவு செய்தார். மேலும், இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க களுவெவ மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

















## மூத்த ஊடகவியலாளர் சீதா ரஞ்சனி காலமானார்

மூத்த பத்திரிகையாளர் சீதா ரஞ்சனி ஞாயிற்றுக்கிழமை(16) காலமானார்.

பெண் பத்திரிகையாளர்களுக்கு அவர் ஆற்றிய ஒப்பற்ற சேவைக்காக 2018இல் இலங்கை பத்திரிகையாளர்கள் சங்கத்தின் 63ஆவது ஆண்டு விழாவில் அவருக்கு டி.ஏ.விருது வழங்கப்பட்டதுடன், மீடியா நினைவு விருதும் வழங்கப்பட்டது.

சீதா ரஞ்சனி இறக்கும் போது அவருக்கு 70 வயது.

இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் பின்னர் அறிவிக்கப்படும்.

1984இல் இருந்து அவர், ஒரு பெண்ணியவாதி, கவிஞர், எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர் என்ற பன்முக ஆளுமை கொண்டவராவார்.



சுயாதீன ஊடக இயக்கத்தின் அழைப்பாளராக விளங்கிய இவர், ஊடகத்துறையில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவராவார்.

நாட்டில் பத்திரிகை சுதந்திரத்திற்கான போராட்டத்தில் அவர் ஒரு முக்கிய நபராக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோடாவுடன் சந்தேக நபர் கைது



தெரணியகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிவல பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோத மதுபானம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை (15) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெரணியகல பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இதன்போது சந்தேக நபரிடமிருந்து 1,434 லீற்றர் கோடா (08 பீப்பாய்கள்) கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், இந்த சம்பவம் தொடர்பில் தெரணியகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காதல் விவகாரம்; உயிரை மாய்த்த இளைஞன்

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் இளைஞன் தன் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் சனிக்கிழமை (15) இடம்பெற்றுள்ளது.

மணல்சேனை கிட்டங்கி வீதி பகுதியைச் சேர்ந்த மதியழகன் சஞ்சய் ( வயது-24 ) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் தொலைபேசி ஊடாக வெளிநாட்டில் உள்ள யுவதி ஒருவருடன் காதல் தொடர்பில் இருந்ததாகவும் காதல் விவகாரமே இந்த தற்கொலைக்குக் காரணம் என பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் கட்டளைக்கமைய குறித்த சடலத்தின் மீதான மரண



விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் மேற்கொண்டுள்ளதுடன், மூச்சுக் குழாய் இறுகி மரணம் சம்பவித்துள்ளதாகக் குறிப்பிட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீதிகளில் பெயரை பதித்த காதலர்கள்

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் காதலர் தினத்தை முன்னிட்டு காதலர்கள் வீதிகளை அசுத்தப்படுத்தியுள்ளதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

பெப்ரவரி 14 காதலர் தினம் கொண்டாடப்படும் நிலையில் பல்வேறு இடங்களில் காதலர் தின கொண்டாட்டங்கள் களை கட்டியிருந்தது

இதன் ஒரு பகுதியாக




வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் வீதிகளில் காதலர்கள் தங்களது பெயர்களை எழுதியதுடன் வீதிகளையும் அசுத்தப்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

## "கல்வித் தகைமை பிரச்சினை அல்ல"



தனது கல்வித் தகுதிகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை நிராகரித்துள்ள முன்னாள் சபாநாயகரும் பாராளுமன்ற உறுப்பினருமான அசோக சபுமல் ரன்வல, அத்தகைய கோரிக்கைகள் வெறும் அரசியல் தந்திரோபாயங்கள் என்று கூறியுள்ளார். பாராளுமன்றத்தில் சான்றிதழ்களை வழங்குவதன் அவசியம் குறித்து கேள்வி எழுப்பிய அவர், அது மக்களின் பிரச்சினை அல்ல என்றும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் கூறியுள்ளதாவது,

சான்றிதழ்களை வழங்க பாராளுமன்றத்தில் ஒரு முறை உள்ளதா? அத்தகைய பாரம்பரியம் உள்ளதா? இவை இழிவான தந்திரோபாயங்கள். நாங்கள் பாராளுமன்றத்தில் மிக முக்கியமான பணிகளைச் செய்கிறோம். விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தனது கல்வித் தகுதிகள் குறித்து பொதுமக்கள் விசாரித்ததைத் தொடர்ந்து, ரன்வல இரண்டு மாதங்களுக்கு முன்பு இராஜினாமா செய்துள்ளார்.

எந்தவொரு தவறான கூற்றுகளையும் மறுத்தாலும், ஜப்பானின் வசேடா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து தனது முனைவர் பட்டத்தை சரிபார்க்க தேவையான சில ஆவணங்கள் தற்போது கிடைக்கவில்லை என்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

தனது இராஜினாமாவைப் பற்றி அசோக சபுமல் ரன்வல பேசுகையில், அரசியல் என்பது ஒருபோதும் பதவிகளைப் பெறுவது பற்றியது அல்ல, எங்களுக்கு தனிப்பட்ட முறையில் வரும் எந்தவொரு சவாலிலும், நாங்கள் நாட்டையும் அதன் மக்களையும் முதன்மைப்படுத்துகிறோம். அதுதான் எங்கள் அரசியல்.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்த பொதுமக்களிடையே சந்தேகங்கள் எழுவதைத் தடுக்கவே தான் பதவி விலகியதாக தெரிவித்துள்ளார்.

## கைதிகளால் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை அறுவடை

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள சிறைக் கைதிகளினால் விளைச்சல் செய்யப்பட்ட நெற்செய்கையின் அறுவடை விழா ஞாயிற்றுக்கிழமை (16) காலை சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலையில் நடைபெற்றது.

சிறைச்சாலைக்குச் சொந்தமான திருப்பெருந்துறையிலுள்ள காணியில் சுமார் 18 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வேளாண்மை செய்கை பண்ணப்பட்டிருந்தது. கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 26ம் திகதி விதைப்பு செய்யப்பட்ட இச்செய்கையின் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 15 மூடைகள் எதிர்பார்க்கப்படுவதாகச் சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.



இயற்கை முறையில் செய்கை பண்ணப்பட்டிருந்த குறித்த நெற்செய்கை

சிறந்த விளைச்சலைத் தந்திருப்பதாகச் சிறைச்சாலை அ.தியட்சகர் தெரிவித்ததுடன், பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வேளாண்மை அறுவடை விழா இடம் பெற்றது.

மேலும், இதில் சிறைச்சாலை அதிகாரிகள், மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# அரசாங்கத்தின் கன்னி பாதீடும்; மக்களின் கனவுகளும்

கனவு யாருக்குத்தான் வரவில்லை. சில கனவுகள் பலிக்கும் இன்னும் சில கனவுகள் இடையிலேயே கலைந்துவிடும். அதுபோலதான், மக்களின் வாழ்க்கையும் கனவிலேயே மிதக்கிறது. தேர்தல்கள் காலங்களில் பல்வேறான வாக்குறுதிகளை அள்ளி வழங்கும் தரப்பினர் ஆட்சிப்பீடம் ஏறியவுடன், திமுறுகின்றனர். இன்றேல், கோரிக்கைகளை அடியோடு மறந்துவிட்டு, ஆட்சியை தக்க வைக்கும் அரசியலமைப்பு திருத்தங்களையே மேற்கொண்டனர். இவை கடந்த கால கசப்பான உண்மையாகும்.

எனினும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், புதிய அரசியலமைப்பு தொடர்பில் அவ்வப்போது கருத்துரைக்கின்றதே தவிர, ஆக்கப்பூர்வமான எவ்விதமான செயற்பாடுகளிலும் இறங்கவில்லை. இது தொடர்பில் பொதுவெளியில் அவ்வப்போது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதற்கிடையே பொருட்களின் விலை அதிகரிப்பு, அத்திவாசிய பொருட்களின் தட்டுப்பாடு, "தூய்மையான இலங்கை" செயற்றிட்டத்தினால் சாதாரண மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களில் கடுமையான கேலி கிண்டல்கள் செய்யப்பட்டு வீடியோக்கள் தரவேற்றம் செய்யப்படுகின்றன.

2024 செப்டெம்பர் 21ஆம் திகதியன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர், அனுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றார். அவர், தனக்குள்ள ஜனாதிபதியின் அதிகாரத்தை பயன்படுத்தி, பாராளுமன்றத்தைக் கலைத்தார், பொதுத் தேர்தல், 2024 நவம்பர் 14ஆம் திகதியன்று நடைபெற்றது. அதில், மூன்றிலிரண்டு அறுதிப் பெரும்பான்மை பெற்ற தேசிய மக்கள் சக்தி, 159 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது.

கடந்த கால அரசாங்கங்கள், மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காத போது, தங்களுக்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள, எதிரணியில் இருந்து உறுப்பினர்களை விலைபேசி, அமைச்சுப் பதவிகள், பிரதி அமைச்சு பதவிகள் இன்றேல் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்கி, தங்களுக்கு ஏற்ற வகையில் திருத்தங்களை மேற்கொண்டு கொண்டது. எனினும், தேசிய மக்கள் சக்தி, அந்த விடயத்தில் அமைதியாக காய் நகர்த்துகிறது,

இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவு-செலவுத் திட்டம் (பாதீடு) நிதியமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால், பாராளுமன்றத்தில் இன்று (17) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

தேர்தல்கள் காலங்களில், சம்பள அதிகரிப்பு, நிவாரணம், முதலீடுகளுக்கான வாய்ப்பு, ஓய்வூதிய கொடுப்பனவு, முதியோர் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் விலை குறைப்பு உள்ளிட்டவை தொடர்பிலான வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தி, அள்ளி வீசியமையால், மக்கள் பெரும் எதிர்பார்ப்பில் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர்.

வாக்குறுதிகளில் சிலவற்றை அரசாங்கம் அவ்வப்போது நிறைவேற்றியுள்ளது. அதன் பயனை மக்கள் அனுபவித்து வருகின்றனர் என்பது உண்மையாகும். எனினும், வறுமை கோட்டிற்கு உட்பட்ட பல குடும்பங்கள், அரசாங்கத்தின் நலன்புரி திட்டங்களில் உள்வாங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன. ஆகையால், அவை தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். என்பதுடன், மக்களின் கனவுகளில் மண்ணை வாரி இறைத்து விடக்கூடாது என்பதே எமது அறிவுறுத்தலாகும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருதுத்க்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# உணரப்படாத ஒற்றுமையின்மையின் பாதகம்

**லக்ஸ்மன்**

நாட்டின் எதிர்க்கட்சிகளில் ஒன்றாக இருந்த கட்சியான தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்ததன் பயனாக, ஆளும் கட்சிகளாகவே சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் வரலாற்றில் இடம்பிடித்திருந்த கட்சிகள் உட்பட ஏனைய அனைத்து கட்சிகளும் எதிர்க்கட்சிகளாகிப் போயிருக்கின்றன. கடந்த வாரத்திலிருந்து மின்சாரப் பிரச்சினை மிகப்பெரும் பிரச்சினையாகத் தலைதூக்கியிருக்கிறது. யூ.எஸ். எயிட் நிதி தொடர்பில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில்தான் வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இந்த வரவு-செலவுத் திட்டம் பல்வேறு கேள்விகளுக்குப் பதிலைக் கொடுத்தாக வேண்டும். தேர்தல் வாக்குறுதிகளின் நிறைவேற்றத்தில் முக்கியமாக அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்களின் விலைக்குறைப்பு, மின்சார விலைக்குறைப்பு என்பனவும் அவற்றில் சிலவாகும். இது பொதுவானதாக இருந்தாலும், தமிழர்களைப் பொறுத்தவரையில், அரசியலமைப்பு உருவாக்கமும் நீண்டகால இனப் பிரச்சினைக்கான தீர்வுமே எதிர்பார்ப்பாக இருக்கிறது.

கடந்த வாரத்தில் தமிழ் சிவில் சமூக அமையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றுகூட, இந்த எதிர்பார்ப்பு சார்ந்ததாக அமைந்திருந்தது. அரசியல் கூட்டுகளுக்கான, தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை நோக்கியதான நகர்வுகள் நடைபெற்று வருகின்ற நிலையிலேயே இந்த அறிவித்தல் வெளிவந்திருக்கிறது,

தேர்தல் கால கூட்டிணைவுகளுக்கு அப்பால், தமிழர் தேசம் முகங்கொடுக்கக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்குத் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இயங்குவது மிக முக்கியமானதாகும் என்ற கோரிக்கையைத் தமிழ் சிவில் சமூக அமையம் முன்வைத்திருக்கிறது. அதன்படி, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள், பாராளுமன்றத்தின் ஊடாக முன்வைக்கப்படக்கூடிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில் கருத்தொருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். அப்பொழுது நிலைப்பாடானது திம்பு கோட்பாட்டின் அடிப்படையிலும், தமிழர் தேசம், சுயநிர்ணய உரிமை, இறைமை மற்றும் வட, கிழக்கு தாயகம் அவர்களது ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பரப்பு ஆகிய விடயங்களில் விட்டுக்கொடுப்பின்றியும் அமையவேண்டும் என்று கோரியிருக்கின்றது.

ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் அறிவித்திருக்கிறது. அது இந்த ஆட்சி நிறைவுக்குள் முடிவடையுமா? என்பது கேள்வியாக இருந்தாலும், வெளிப்பூச்சுக்கு வேலைகள் நடைபெறுகின்றன என்றே கொள்ளவேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில் அரசுக்கெதிரான நிலைப்பாட்டில் இதுவரையில் ஒற்றுமையான பொது நிலைப்பாட்டுக்கு யாரும் வந்து விடவில்லை. குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி கடந்த தேர்தலில் தமிழ் மக்களிடமிருந்து தங்களுக்குக் கிடைத்த வாக்குகளையும் ஆசனங்களையும் வைத்துக் கொண்டு தாமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டில் இருந்து வருகின்றது. அதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஒற்றுமைக்கு அழைத்திருக்கிறது. அதே நேரம் தமிழரசுக் கட்சியின் வழக்கு விடயம் காரணமாகத் தலைவர் இன்னமும் தெரிவாகா நிலையொன்று காணப்படுகின்றமையானது இதனை மேலும் சிக்கல்படுத்தியிருக்கிறது. ஆனாலும் கீழே விழுந்தும் மண்ணொட்டாத பேச்சுக்களும் இல்லாமலில்லை.

காலங்காலமாக நடைபெற்றுவருகின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமைக்கான முயற்சிகள் பரிகசிக்கப்படுவது வழமையாக இருந்தாலும், நடைபெறும் ஒற்றுமைக்கான முயற்சிகள் நிறுத்தப்படவில்லை. தமிழ்த் தேசிய அரசியலில் கூட்டுகளும் குலைவுகளும், விமர்சிப்புக்களும் குறையவுமில்லை. என்றாலும், தற்போது நடைபெற்று வருகின்ற முயற்சியை முக்கியமானதாகப் பார்க்கவேண்டும்.

2000ஆம் ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கினர் என்று சொல்வதற்கு யாரும் தயாரில்லை. அதே நேரத்தில், இதில் முழுக்க முழுக்க கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கமும், கிழக்குப் பத்திரிகையாளர்களும் மும்முரமாக ஈடுபட்டனர் என்பதனையும் பலரும் மறைக்க முனைகின்றனர். ஆரம்பத்தில் ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய நான்கு கட்சிகளே இணைந்திருந்தன. அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாகத் தேர்தலில் பயன்படுத்தப்பட்டது. இருந்தாலும், அக்கட்சியின் விலகலையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னம் மீண்டும் தூசி தட்டி தேர்தலுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால், இதனை மறந்து விட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி தாய்க் கட்சி தந்தைக் கட்சிக் கதைகளை இப்போதும் அளந்துவருகிறது.

2009 யுத்த மௌனிப்புக்குப் பின்னர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தற்போதுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விலகச் செய்யப்பட்டது. பின்னர் ஈ;.பி.ஆர்.எல்.எவ். விலகிக் கொண்டது. அதன் பின்னர்தான் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்த இலங்கைத் தமிரசுக் கட்சி விலகிக் கொண்டது. இருந்தாலும், ஏனைய கட்சிகள் விலகிக் கொண்டதாகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி வெளியே காண்பித்திருந்தது. இதில் உள்ள ஒருவித மாயை என்பதனை புரிந்து கொள்ளாத தமிழ் மக்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இவ்வாறான நிலையில், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமைக்கான முயற்சிகள் பூரணம் பெறுமா என்பது கேள்விக்குரியதாகின்றது. காலங்காலமாக நடைபெற்றுவந்திருக்கின்ற கூட்டுக்கள் தனிப்பட்ட பல காரணங்களினால் இல்லாமல் போயிருக்கின்றன. அதற்குப் பங்காளிகளை இகழ்ச்சியாக கையாள்வதும் காரணமாகும். அது தவிர, தனிப்பட்ட நலன்களும் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன. தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என இந்தியா உள்ளிட்ட பல நாடுகளும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன. இருப்பினும் அது வரலாற்றில் நிரந்தரமானவையாக இருக்கவில்லை என்பதே யதார்த்தம். அதனால்தான் பிரித்தாளும் தந்திரங்களும் கையாளப்பட்டிருந்தன. அதன் விளைவு பல

இந்த நிலையில்தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்திருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்வு தொடர்பில் கொண்டிருக்கின்ற தமிழர்கள் சார்ந்த கடந்தகால நிலைப்பாடுகள், இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு விடயங்களைத் தமிழ்த் தேசிய அரசியலில் கருத்தில் கொள்வது அவசியம் என்பது முக்கியம் பெறுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் கொண்டு வரப்பட்ட எந்தவொரு அரசியலமைப்பும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் இசைவுடன் கொண்டு வரப்பட்டவைகள் அல்ல. இருந்தாலும், இந்த அரசாங்கம் வடக்குக் கிழக்கின் ஒரு தொகுதி மக்களின் ஆதரவுடன் பெற்றுக் கொண்ட ஆசனங்களையுடையதாக இருக்கிறது. இது அரசியலமைப்புக்காகத் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையாகக் கொள்ளப்படுமானால் வரலாற்றின் பெரும் கறையாகவே இருக்கும்.

கடந்த தேர்தலில் போட்டியிட்ட, கடந்த காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபட்டிருக்கின்ற முன்னாள் ஆயுத இயக்கங்கள் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள், கொலைகாரர்கள், கொடுமைக்காரர்கள் போன்ற பல அடைமொழிகளுக்குள் விமர்சிக்கப்பட்டன. அதற்காகக் கோடிக்கணக்கில் பணம் செலவிடப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் காணப்படுகின்றன. இது வெளிப்படையாக அல்லாமல், தேசிய மக்கள் சக்தி மேற்கொண்ட மறைமுக நடவடிக்கைகளுக்கு ஒப்பான வகையில், தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்காது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தமை தமிழ்த் தேசிய கருத்தியலைத் தமிழ் மக்கள் மறுதலித்ததனால்தான் என்று கொள்வதற்கு மாறாக தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கி வரும் அரசியல் கட்சிகள் மீது ஏற்பட்ட சலிப்பே காரணம் என்று வெறுமனே ஒதுக்கி விட முடியாதபடிக்கு அது இருந்து கொண்டுமிருக்கிறது,

எது எவ்வாறானாலும், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகளாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகளே பாராளுமன்றத்தில் இருக்கின்றன. இந்தக் கட்சிகளுக்குள் ஒரு உடன்பாட்டுக்கும் ஒருமிப்புக்கும் வரவேண்டியது அவசியமாகும். இருந்தாலும், ஒற்றுமையுடனான பயணத்தில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி பங்கெடுக்கத் தயாராக உள்ளதாக அறிவித்து விட்டது. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அதனையொத்த கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சியானது தனி வழியிலேயே இருந்து கொண்டிருக்கின்றது.

இந்தத் தனி வழியானது தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் எந்தப்பயனையும் தந்து விடப் போவதில்லை. என்பதனை தமிழரசுக் கட்சி புரிந்துகொள்ள ஏன் கால தாமதமாகின்றது என்பது அவர்களின் கணிப்பீட்டு, மதிப்பீட்டுத் தவறையே காட்டுகின்றது.

அதே நேரத்தில், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான அரசியலைச் செய்பவர்களாகத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இருப்பார்களானால், ஏன்? அவர்கள் சுயநலவாதிகளாகவும் தனிப்பட்ட விடயங்களுக்கானவர்களாகவுமே பார்க்கப்பட வேண்டும். எது எவ்வாறானாலும், நடைபெறுபவை நல்லவையாகவே இருக்க வேண்டும் என்று நம்புவோம்.

கடந்த கால அரசுகளுக்கு ஒப்பான நகர்வுகளுடன் செயற்படும் அரசே இருக்கையில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளின் ஒற்றுமை இன்மை மேலும் பாதகங்களையே ஏற்படுத்தும் என்பதும் புரிதலுடன் விளக்கிக்கொள்ளப்படுதலே இப்போதைக்கு முக்கியமானது.



## வாழ்வியல் தரிசனம்

உரிமை என்பது தமக்கானது மட்டும் எனும் எண்ணம் ஆள்பவர்களுக்கு உருவாகி விட்டது. அத்துடன், சுதந்திரமும் தங்களுக்கான சொத்து என வெளிப்படையாகக் காட்டுகின்றனர். நடத்தையில் நீதி, நியாயம் அறவே இல்லை.

தங்கள் செயல்களில் இறுமாப்பு அடைகின்றவர்கள், எதிர்காலத்தின் தாக்கங்களை உணர்வதே இல்லை. உலக மாற்றங்கள் இயல்பானவை. சர்வாதிகாரம் என்பது வெறும் புஷ்வாணம் ஆகும் என்பதை உணர்கின்றார்கள் இல்லை. மக்கள் பலம் பற்றி அறியாமல் இருப்பது வீழ்ச்சியைத் தரும்.

இத்தகையவர்கள் தங்களைத் தாங்களே இழக்கின்றார்கள். கற்பனையில் பல அரசாங்கங்கள் இயங்குகின்றன. மக்கள் குரல்கள் இவர்களுக்குக் கேட்கவில்லை என நடிக்கிறார்கள்.

எதுவும் நிரந்தரம் இல்லை. பொய்மை கருகிவிடும். கர்மா எவரையும் விட்டுவிடாது. கர்மா, செய்த தவறுகளுக்குத் தண்டனை வழங்கும்.

இயற்கை நியதிகூட, 'கர்மா' என்பதில் ஐயம் இல்லை. ஆண்டவன், துட்டர்களை மன்னிப்பதும் இல்லை; மறப்பதும் இல்லை.

நன்றி– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேசங்களை இணைக்கும் கோணாவத்தை ஆற்றங்கரை பிரதான காபட் வீதி கடந்த மூன்று மாத காலமாக சிதைவடைந்து காணப்படுவதாகவும் தற்போது இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தினமும் பயன்படுத்தும் குறித்த பாதையை புனரமைத்து தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் அசமந்தப் போக்கில் உள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அண்மையில் பெய்த அடைமழையுடன் வெள்ள நீர் நிறைந்திருந்ததால் அதை அப்புறப் படுத்தும் வகையில், குறித்த வீதி அட்டாளைச்சேனை பிரதேச சபை மூலம் உடைக்கப்பட்டு ஆற்றுப் பகுதிக்குள் வெளியேற்றப்பட்டது.

இவ்வாறு உடைக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்கு மேலாகியும் சீர் செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றதுடன், மழை காலங்களில் தொடர்ச்சியாக இவ்வீதி உடைப்பெடுப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் இப்பாதையை பயன்படுத்துவதில் பல்வேறான சிரமங்களையும் எதிர்நோக்கி வரும் நிலையில், துறைசார் அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு குறித்த வீதியை மக்கள் போக்குவரத்திற்காக தயார் செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

– எம்.ஏ.றமீஸ்

# லண்டனில் மு.நித்தியானந்தனின் நூல் அறிமுகம்





எஸ்.லோகதாசன்

‘நன்னூல் ஒரு நூலுக்கான முன்னுரை எனப்படும் ‘பாயிரம்’ என்பதனை விளக்கும்போது, ஆயிரம் உறுப்புகளைக் கொண்டு விரிவான நூலாக இருந்தாலும் முன்னுரை இல்லாதது நூல் அன்று’ என்று குறிப்பிடுகிறது. இதனை நன்குணர்ந்திருக்கின்ற நித்தியானந்தன் தாம் முன்னுரை எழுத நேர்ந்த நூல்களுக்கெல்லாம் மிக அருமையான முன்னுரைகள் எழுதியிருக்கிறார்.

பெரும்பாலான முன்னுரைகள், சம்பந்தப்பட்ட நூலிலே சொல்லப்படாமல் விடப்பட்டிருக்கின்ற பல செய்திகளைச் சொல்வனவாக இருக்கும். அவருடைய முன்னுரைகள் எல்லாம் அத்தனை ஆழமானவை; அகலமானவை; ஆராய்ச்சிப் பண்புகளைக் கொண்டவை. ‘இந்திய இலக்கியம்: கைலாசபதியும் அனந்தமூர்த்தியும்’ என்ற மு.நித்தியானந்தனின் நூலில் அடங்கியுள்ள பத்துக் கட்டுரைகளில் பல அவரின் முன்னுரைகளாகும். இந்த முன்னுரைகள் நித்தியானந்தனின் ஆழமான தேடலையும் ஆய்வுப்புலமையையும் வெளிப்படுத்துவனவாகும்’ என்று தமிழறிஞரும் சட்ட நிபுணருமான செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்கள் அண்மையில் (1.02.2025) இலண்டனில் நடைபெற்ற மு.நித்தியானந்தனின் ‘இந்திய இலக்கியம்: கைலாசபதியும் அனந்தமூர்த்தியும்’ என்ற நூல் அறிமுக விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் எம்.என்.எம்.அனஸ் தனது உரையின்போது, ‘இலங்கை, தமிழக இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் அச்சுப் பண்பாடு’ என்ற நித்தியானந்தன் அவர்களின் கட்டுரை இத்துறையில் எழுதப்பட்ட முதன்மை வாய்ந்த கட்டுரையாகும். திருத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களது மொழி அரபு என்பதாலும், திருக்குர்ஆனின் மொழி அரபு ஆதலாலும், சுவனத்தில் பயிலப்படும் மொழி அரபு என்பதாலும் உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் அரபு மொழியை ஆராதிக்கிறார்கள் என்று நித்தியானந்தன் மிகச் சரியாக அடி எடுத்து வைத்து ஆரம்பிக்கும் இக்கட்டுரை இஸ்லாமிய அச்சுப் பண்பாட்டின் தோற்றத்தை, அதன் வியாபகத்தை, ஓட்டோமன் காலத்தில் நிலவிய அரபு மொழி அச்சாக்கம் பற்றிய சர்ச்சைகளை எல்லாம் துருவி ஆராய்ந்து, புத்தம் புதிதான தகவல்களாலும் தேடலாலும் நிரம்பி வழிகிறது. துளிகூடக் கலப்பில்லாத, தெளிவான அழகிய மொழியான அரபு மொழியிலிருந்தே பார்ஸிய, உருது மொழிகள் தமது லிபிகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. துருக்கியில் வாங்கு அழைப்பு விடும்போது, அரபு மொழிக்கு மாறாக, துருக்கிய மொழியைப் பயன்படுத்தி, அனைத்தையுமே துருக்கிமயப்படுத்த முனைந்த போதிலும் அரபு தனது இலக்கியச் செழுமையையும் தனித்துவத்தையும் பேணி வளர்ந்துள்ளது’ என்று குறிப்பிட்டார்.

அரபு மொழி ஆபிரிக்க -ஆசிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் பாரசீக மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் உருது மொழி என்பது பன்னிரண்டாம் நூற்றாண்டில் வடமேற்கு இந்தியாவில் தோன்றிய மொழி என்றும், அது ஹிந்தி மொழியிலிருந்து தோன்றிய மொழி என்றும், பிற்றைக் காலத்தில் அது பாரசீகச் சொற்களையும் அரபுச் சொற்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறதென்றும் திரு செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்கள் தனது தலைமையில் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

தமிழ் ஆசிரியையும் இலக்கியத் திறனாய்வாளருமான மாதவி சிவலீலன் தனது உரையில், ‘நித்தியானந்தனின் கட்டுரைகள் எப்போதுமே புத்தம்புதிய தரவுகளைக் கொண்டதாகவே அமையும். பரந்த தனது வாசிப்பு, புதியன தேடும் அவரது பார்வைக் கோணம் என்பன அவரது கட்டுரைக்கு ஆழமான பரிமாணத்தை வழங்குகின்றன.

கைலாசபதியும் அனந்தமூர்த்தியும் பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்த காலத்தில், டைம்ஸ் என்ற ஆங்கிலச் சஞ்சிகைக்கு எழுதிய கடிதங்களில் காணப்படும் இலக்கிய சர்ச்சைகளை, ஐம்பது ஆண்டுக் காலத்திற்குப்பின் இலக்கிய உலகிற்குக் கொண்டுவந்திருக்கும் நித்தியானந்தன் அவர்களின் பணி மகத்தானது. எங்கள் சமூகத்தின் மத்தியில் இத்தகைய ஆளுமை கொண்ட ஆய்வாளர் இருப்பது எங்களின் பெருங்கொடையாகும்’ என்று கருத்துரைத்தார்.

அரசியல் செயற்பாட்டாளரான ராகவன் தனது இலக்கிய விமர்சனத்தின்போது, ‘பொது நலவாய நாடுகளின் இலக்கியம்: கைலாசபதியும் அனந்தமூர்த்தியும் எனும் முக்கியமான கட்டுரை தீர்க்கமான கேள்விகளை எழுப்புகிறது. 1964 இல் லீட்ஸில் நிகழ்ந்த பொதுநலவாய இலக்கிய மாநாடு பற்றி கைலாசபதி, அனந்தமூர்த்தி ஆகியோர் டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதிய கடிதங்கள், அதற்குப் பேராசிரியர் நாகராஜன் வைத்த எதிர்வினை என்பனவற்றை முன்வைத்து எழுதப்பட்ட கட்டுரை இது.

இதில் முக்கியமான அம்சம் பொதுநலவாய இலக்கியம் என்பது பொதுநலவாய நாடுகளிலிருந்து ஆங்கிலத்தில் எழுதப்படும் இலக்கியம் என்ற குறுகிய வரையறையைக் கொண்டிருப்பதாகும். இந்த மாநாட்டைத் தொடர்ந்து டைம்ஸ் பத்திரிகையில், இது கொமன்வெல்த் இலக்கியமல்ல கொமன்வெல்த் அல்லாத (un-commonwealth) இலக்கியம்; ஏனெனில் சொந்த மொழியில் எழுதப்படும் இலக்கியங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை எனச் சிலாகித்து எழுதப்பட்டது. அதனை வரவேற்று கைலாசபதி - அனந்தமூர்த்தி இருவரும் ஒரு கடிதத்தை எழுதியிருந்தனர்.

சுதேச எழுத்தாளர்களே இந்தியாவின் ஆன்மாவைப் படம் பிடித்துக் காட்டுபவர்கள். அவர்களை ஒதுக்கிய கொமன் வெல்த் இலக்கியம் அவர்களது பனுவல்களுக்கான முன்னுரிமையைக் கொடுக்காதது தவறு. இந்திய உணர்வை வளர்ப்பதில் சுதேச எழுத்தாளர்கள் பெரும் பங்கினை ஆற்ற முடியும்.

ஆங்கிலத்தில் எழுதும் எழுத்தாளர்களுக்கு இந்திய உணர்வைப் பிரதிபலிப்பதில் உள்ள போதாமை, அவர்களின் ஆங்கில செருக்கு, சுதேச எழுத்தாளர்களை மதிக்காத தன்மை கொண்டது. சுதேச எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்பாற்றல் புறக்கணிக்கப்படுவது நியாயமானதல்ல என்பதை அவர்கள் வலியுறுத்தினர்.

இவ்வகையில் கைலாசபதி, அனந்தமூர்த்தியின் தலையீட்டினை விளிம்பு நிலை மக்கள் சார்பில் எழுந்த குரலெனக் கொள்ளலாம். எனினும் கொமன் வெல்த் இலக்கிய உருவாக்கத்தைக் காலனித்துவப் பின்னணியில் நோக்குதல் அவசியம். காலனித்துவம் என்பது அரசியல் பொருளாதார ஆக்கிரமிப்பு மட்டுமல்ல, பண்பாட்டுத் தள ஆக்கிரமிப்புமே. இவ்வகையில் கொமன் வெல்த் இலக்கியமென்பது ஆங்கில இலக்கியத்தை விடத் தரம் குறைந்ததென்ற காலனித்துவ மனநிலையின் தொடர்ச்சி என்ற வாதம் கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இன்னொருபுறம், சாதியப் படி நிலையால் கட்டப்பட்ட இந்தியச் சமூகத்தில் ஆங்கிலம் அதிகாரச் சின்னமாகவும் அதே வேளை கல்வி மறுக்கப்பட்ட தலித மக்களின் குரலுக்கான விடுதலை மொழியாகவும் செயல்படுகின்றதென்கிறார் அருந்ததி ராய். கொமன் வெல்த் இலக்கியத்துக்கெதிரான போக்குகள் தற்போது போஸ்ட் காலனிய இலக்கியம், காலனித்துவ நீக்கல் இலக்கியம் என உருவாகியுள்ளன.

மொழிப் பண்பாடு என்பது கலப்புத் தன்மை கொண்டது. அதனைத் தூய்மைப் படுத்தல் என்பது பாசிசத்துக்கான தொடக்கம். எனவே காலனித்துவத்தைப் பற்றிய புரிதல், மேற்கு நாடுகளின் அரசியல் பொருளாதாரப் பண்பாட்டுத் தளங்களில் ஏற்படும் தாக்கம் அல்லது நாடுகளுக்குள் இருக்கும் அரசியல் கலாசார மேலாண்மை என்பதற்கான எதிர்வினை என்பது உணரப்படவேண்டும். கலாசார தனித்துவம் என்ற பதாகையின் கீழ் எழுவதில் உள்ள அபாயங்களையும் நாம் உணர்தல் அவசியம்’ என்று குறிப்பிட்டார்.

‘நூலாசிரியர் மு.நித்தியானந்தன்நம் சமூகத்தின் பெறுமதிமிக்க ஆய்வாளர்’ என்று ஆங்கில இலக்கியவாணர் எஸ்.லிங்கேஸ்வரன் கருத்துரைத்தார்.

நூலாசிரியர் மு.நித்தியானந்தன் தனது ஏற்புரையில், தன்னைச் சூழக் கனதியான இலக்கிய ஆளுமைகள் இருப்பது தனது பெரும்பலன் என்று தெரிவித்தார். கைலாசபதி அனந்தமூர்த்தியுடன் கொண்டிருந்த தொடர்பு குறித்து, பேராசிரியர் அனந்தமூர்த்தி லண்டனுக்கு வந்திருந்தபோது, அவருடன் உரையாடியபோதேதான் அறிய நேர்ந்தது என்று குறிப்பிட்டதுடன், ‘வெள்ளி’ என்ற வரதர் நடத்திய சஞ்சிகையில், கைலாசபதி அனந்தமூர்த்தி பற்றிய தனது பதிவைச் செய்திருக்கிறார் என்ற தகவலைப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் தன்னுடன் அண்மையில் பகிர்ந்திருந்தார் என்பதையும், அந்தக் கட்டுரையின் சாரம் என்ன என்பதைப்பற்றியும் கருத்துரைத்தார்.

எம்.பௌசர் ஒழுங்கு செய்திருந்த லண்டன் நூல் கண்காட்சியில் இந்த நூல் அறிமுகம் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ComBank Digital வாடிக்கையாளர்களுக்கு விமான டிக்கெட்களை வெல்லும் வாய்ப்பு




ComBank Digital இன் பயனாளிகள், வங்கியினால் 2025 ஏப்ரல் மாதம் வரை முன்னெடுக்கப்படும் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ், டிஜிட்டல் தளத்தில் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதன் மூலம் தாய்லாந்திற்கான விமான டிக்கெட்டுகளை வெல்லும் வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் என வங்கி அறிவித்துள்ளது.

குறித்த ஒரு மாதத்தில் ComBank Digital இல் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளை மேற்கொண்ட வாடிக்கையாளர்களிடையே சீட்டிழுப்பு குலுக்கல் முறையில் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் ஒரு வாடிக்கையாளருக்கு இரண்டு விமான டிக்கெட்டுகள் என்ற ரீதியில் ஒவ்வொரு மாதமும் கொமர்ஷல் வங்கியால் வழங்கப்படவுள்ளன. இந்த சீட்டிழுப்பு குலுக்கல் முறைக்கு தகுதிபெறுவதற்கு, பரிவர்த்தனைகள் மூன்று பயன்பாட்டு பில் பட்டியல்கள் மற்றும் மூன்று நிதி பரிமாற்றங்களைக் கொண்டிருக்க வேண்டும். இந்த ஊக்குவிப்பு திட்டமானது லங்காபேயுடன் இணைந்து நடத்தப்படுகிறது.

‘ComBank Digital ஏற்கெனவே மாதாந்தம் சராசரியாக 5 மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளைச் செயல்படுத்துகின்ற போதிலும் அதற்கும் அதிகமான பரிவர்த்தனைகளுக்கான திறனைக் கொண்டுள்ளது’ என்று கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ச தெரிவித்தார். ‘அதிகரித்த பயன்பாடு எங்கள் டிஜிட்டல் சேவைகளை மேம்படுத்த உதவுகிறது, எங்கள் வாடிக்கையாளர்கள் சிறந்த வங்கி அனுபவத்தைப் பெறுவதை உறுதிசெய்து, பாரம்பரிய வங்கியிலிருந்து டிஜிட்டல் வங்கிக்கு மாறுவதால், அவர்களின் நிதியியல் முகாமைத்துவத்தை எளிதாகவும் வசதியாகவும் மாற்றுகிறது’

ComBank டிஜிட்டலின் ‘பரிவர்த்தனை செய்து வெல்லுங்கள்’ ஊக்குவிப்பு திட்டத்தின் டிசம்பர் மாத வெற்றியாளர் மல்ஷா தில்மி ஆவார், அவர் ஏற்கெனவே தாய்லாந்திற்கான டிக்கெட்டுகளைப் பெற்றுள்ளார்.

கொமர்ஷல் வங்கியின் ‘Digital by Default’ வர்த்தக மாதிரியால் செயற்படுத்தப்படும், ComBank Digital ஆனது 1.5 மில்லியனுக்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட பயனர்களைக் கொண்டுள்ளதுடன், மற்றும் ஒரு மாதத்திற்கு ரூ.400 பில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளை மேற்கொள்கிறது. சில்லறை விற்பனை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் (SME) மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவை புரிவதற்காக மிகவும் பரந்தளவில் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் தளமான, ComBank Digital ஆனது பதிலளிக்கக்கூடிய இணைய பயன்பாடு மற்றும் மூன்று சொந்த மொபைல் பயன்பாடுகள் (iOS, Android மற்றும் Huawei) மூலம் வழங்கப்படுகிறது. மேசை கணினிகள், மடிக் கணினிகள், டப்கள் மற்றும் ஸ்மார்ட்போன்கள் போன்ற அனைத்து சாதனங்களிலும் அணுகலுடன், வங்கித் தேவைகள், செல்வ முதலீடு, பணம் செலுத்துதல் மற்றும் வாழ்க்கை முறை போன்ற செயல்பாடுகளை இது உள்ளடக்கியது.

புதிய வாடிக்கையாளர்கள் ComBank Digital ற்கு முதல் ஆண்டு வருடாந்த கட்டணம் அல்லது அனுமதி கட்டணம் இல்லாமல் பதிவு செய்து கொள்ளலாம், இதனால் அவர்கள் இணையற்ற வசதியை அனுபவிக்க முடியும். பரந்த அளவிலான புதிய அம்சங்கள், நன்மைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு உற்சாகமூட்டும் சலுகைகளை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம் என்று வங்கி தெரிவித்துள்ளது.

# Galaxy AI இலங்கையில் அறிமுகம்






புதிய Galaxy S25 Series ஐ Samsung Sri Lanka உத்தியோகபூர்வமாக இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் Galaxy S25 Ultra, Galaxy S25+ மற்றும் Galaxy S25 ஆகிய மூன்று மாதிரிகள் அடங்கும். இந்த Series புதிய AI தொழில்நுட்பத்துடன், புரட்சிகரமான பல்வகை AI முகவர்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் பாவனையாளர்கள் தங்கள் சாதனங்களுடனும் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்துடனும் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதை மறுவரையறை செய்கிறது.

அதேபோல, Galaxy-க்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட Snapdragon-8 Elite Mobile Platform தொழில்நுட்பத்துடன், தனித்துவமான AI செயல்திறன், மிகச் சிறந்த கேமரா தொழில்நுட்பம் மற்றும் வசதியான பாவனையாளர் அனுபவத்தை வழங்குகிறது. இது நாட்டின் கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும். இது குறித்து Samsung Sri Lanka மற்றும் Maldives நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் SangHwa Song கருத்து தெரிவிக்கையில், ‘மிகச் சிறந்த கண்டுபிடிப்புகள் எப்போதும் பாவனையாளர்களின் தேவைகளை பிரதிபலிக்கும். எனவே நாங்கள் Galaxy AI-ஐமேம்படுத்தி, அனைவரும் எளிதாக கையாளக்கூடிய, தங்கள் தனிப்பட்ட தன்மையை பாதுகாக்கும் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். AI-integrated OS தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய Galaxy S25 Series, அன்றாட வாழ்க்கையில் தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் விதத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி” என தெரிவித்தார்.

சந்தையில் உள்ள அனைத்து Galaxy S25 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சாதனங்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தில் (TRCSL)பதிவு செய்யப்பட்ட தயாரிப்புகளாக இருப்பதால், பாவனையாளர்கள் எந்தவித சந்தேகமும் இன்றி தொடர்ந்து பயன்படுத்தலாம்.

Samsung Galaxy S25 Series பாவனையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப சுயமாக மாற்றமடையும் AI துணையை (AI Companion) அறிமுகப்படுத்துகிறது. இதன் மூலம் தனியுரிமையை முன்னிலைப்படுத்தி தனிப்பயனாக்கப்பட்ட தொடர்புகளை உறுதி செய்கிறது. Google உடன் இணைந்து, AI-ஐ மையமாகக் கொண்ட Android இயங்கு தளத்தை Samsung மறுவடிமைத்துள்ளது. இது பன்முக ஊடகத் திறன்களை (Multimodal AI Capabilities) மேம்படுத்தி உரை, பேச்சு, படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் பாவனையாளர்கள் இயல்பாக தொடர்புகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Circle to Search மூலம் தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் URLs-ஐ உடனடியாக கண்டறியலாம். Context-Aware Assistance எனும் அம்சம், GIF களை பகிர்வது அல்லது நிகழ்வுகளின் விபரங்களைச் சேமிப்பது போன்ற பணிகளை துரிதமாக செய்ய, செயலிகள் இடையே எளிதாக மாற உதவுகிறது. மேம்படுத்தப்பட்ட இயற்கை மொழி புரிதல் (Natural Language Understanding) மூலம் Samsung Gallery இல் குறிப்பிட்ட புகைப்படங்களை குரல் கட்டளைகள் மூலம் கண்டுபிடிக்க முடியும். ஒரே அழுத்தில் செயல்படுத்தக்கூடிய ஒருங்கிணைந்த Gemini AI, Samsung, Google மற்றும் Spotify போன்ற மூன்றாம் தரப்பு Apps களுக்கு இடையே இயல்பாக தொடர்பு கொள்ள உதவுகிறது. இதுதவிர, Call Transcript மற்றும் Writing Assist அம்சங்கள் மாதம் ரூ. 10,989 என்ற 24 மாத தவணை முறையில் கொள்முதல் செய்யலாம். மேலும், Google One Offer சலுகை திட்டத்தின் கீழ் 6 மாத Gemini Advanced மற்றும் 2TB cloud storage இலவசமாக வழங்கப்படுகிறது.

Galaxy S25 Ultra மாதிரிகள் Titanium Silverblue, Titanium Black மற்றும் Titanium Gray ஆகிய நிறங்களிலும், Galaxy S25 & S25 மாதிரிகள் Navy, Silver Shadow, Icy Blue ஆகிய நிறங்களிலும் கிடைக்கின்றன. அதுமாத்திரமின்றி, Galaxy S25 Seriesஐ John Keells Office Automation, Singer, Singhagiri, Damro, Softlogic Retail, Dialog, SLT Mobitel மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் மூலம் நாடு முழுவதும் கிடைக்கிறது. உங்கள் சொந்த Galaxy S25 Series ஐ இப்போதே https://www.jkoa.com/products/mobiles_and_accessories/phones என்ற முகவரியில் order செய்யுங்கள்.

புதுடெல்லி

ரயில் நிலையத்தில் கூட்ட நெரிசல்:

# 18 பேர் பலி

டெல்லி ரயில் நிலையத்தில், சனிக்கிழமை (15) ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

கும்பமேளா விழா நிகழ்வில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவதற்காக இந்தியா மட்டுமின்றி, உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் துறவிகள், சாதுக்கள், ஆன்மிக தலைவர்கள் மற்றும் பக்தர்கள் என இலட்சக்கணக்கானோர் பிரயாக்ராஜ் வந்து செல்கிறார்கள்.

அந்த வகையில், டெல்லி ரயில் நிலையத்தில், சனிக்கிழமை (15) இரவு, பயங்கர கூட்ட நெரிசல் காணப்பட்டது. உத்தரப் பிரதேசம் செல்லும் ரயிலில் ஏற ஒரே நேரத்தில் பயணிகள் முண்டியடித்துள்ளனர். இரவு 9:15 மணிக்கு அதிகளவில் பயணிகள் திரண்டனர். இதையடுத்து 13, 14 மற்றும் 15-வது பிளாட்பாரங்களில் கூட்ட நெரிசல் அதிகமானது. இதனால் நெரிசல் ஏற்பட்டு 3 குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், பலர் காயமடைந்துள்ள நிலையில், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, இந்த நெரிசல் சம்பவம் தொடர்பாக உயர் மட்ட விசாரணைக்கு ரயில்வே உத்தரவிட்டுள்ளது.



தற்போது கூடுதலாக 4 ரயில்கள் இயக்கப்பட்டுள்ளதாகவும் டெல்லி ரயில் நிலையத்தில் தற்போது கூட்டம் குறைந்து இருப்பதாகவும், ரயில்வே அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேலும், கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் (இந்தியப் பெறுமதி) நிதியுதவி அறிவித்துள்ளது. மேலும், படுகாயமடைந்தவர்களுக்கு 2.5 இலட்சம் ரூபாய் மற்றும் லேசான காயமடைந்தவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் நிதியுதவியை ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா

இந்திய மாணவர்களால்


# அமெரிக்காவுக்கு பல கோடி வருவாய்

அமெரிக்காவில் கல்வி பயிலும் இந்திய மாணவர்களால் அந்த நாட்டுக்கு ஆண்டுதோறும் சுமார் 69,000 கோடி ரூபாய் வருவாய் கிடைப்பதாக, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா முழுவதும் சுமார் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்கள் மூலம் அமெரிக்காவுக்கு ஆண்டுதோறும் 69,000 கோடி ரூபாய்வருவாய் கிடைக்கிறது. இந்திய மாணவர்களால் அமெரிக்காவில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகி உள்ளன

அமெரிக்காவில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையில் சீனர்கள் முதலிடத்தில் இருந்தனர். கொரோனா பெருந்தொற்று, அமெரிக்கா-சீனா இடையிலான உறவில் விரிசல் உள்ளிட்ட காரணங்களால் கடந்த சில ஆண்டுகளில் சீன மாணவ, மாணவியரின் எண்ணிக்கை கணிசமாக குறைந்திருக்கிறது.

தற்போதைய நிலையில் இந்திய மாணவ,



மாணவியரே அமெரிக்க கல்வி நிறுவனங்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். ஆனால், இந்திய மாணவர்களால் அமெரிக்காவுக்கு ஆண்டுதோறும் 121,335 கோடி ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது என்று தனியார் பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

அமெரிக்கா


பணய கைதி விவகாரம்:

# இஸ்ரேல் முடிவுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்

பணய கைதி விவகாரம் தொடர்பில் இஸ்ரேல் எடுக்கும் முடிவுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பணய கைதி விவகாரம் தொடர்பில், ட்ரம்ப் விதித்த காலக்கெடு சனிக்கிழமையுடன் (15) முடிவடைந்தது. இந்நிலையில், இதுபற்றி சமூக வலைத்தளத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


அந்த பதிவில் மேலும்



குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“3 பணய கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவித்துள்ளது. அவர்களில் அமெரிக்கக் குடிமகனும் ஒருவர் அடங்குகின்றார். அவர்கள் நல்ல நிலையில் காணப்படுவது போல் உள்ளது என தெரிவித்துள்ளார்.

“எந்த பணய கைதியையும் விடுவிக்கமாட்டோம் என அவர்கள் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கைக்கு இது முரண்படுகிறது. அனைத்து பணய கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என விதித்து இருந்த காலக்கெடு சனிக்கிழமை(15) மதியம் 12 மணியுடன் முடிவடைந்த நிலையில், அதுபற்றி இஸ்ரேல்தான் இனி முடிவு செய்ய வேண்டும். அவர்கள் எடுக்கும் முடிவுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




பிரேசில்

# அடுத்த பிரிக்ஸ் உச்சிமாநாடு தொடர்பான அறிவிப்பு

அடுத்த பிரிக்ஸ் உச்சிமாநாடு, ஜூலை 6,7ஆம் திகதிகளில் ரியோ டி ஜெனிரோவில் நடைபெறும் என்று பிரேசில் அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு வரை, வளரும் பொருளாதாரங்களின் கூட்டமைப்பிற்குப் பிரேசில் தலைமை தாங்குகிறது.

மேலும், உலகளாவிய தெற்கு நாடுகளிடையே உலகளாவிய நிர்வாக சீர்திருத்தம் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு பிரிக்ஸ் அமைப்பு பிரேசில், ரஷியா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் இணைந்து நிறுவப்பட்டது. பிறகு, 2010ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா இந்த அமைப்பில் இணைந்தது.

கடந்த ஆண்டு, ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவற்றைச் சேர்ப்பதன் மூலம் இந்த கூட்டமைப்பு விரிவடைந்தது. சவூதி அரேபியாவும் இந்த அமைப்பில் இணைவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர துருக்கி, அஜர்பைஜான் மற்றும் மலேசியா முறையாக உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளன.

ரஷ்யா


# சைபீரியாவில் நிலநடுக்கம்

ரஷ்யாவின் தெற்கு சைபீரியாவில் உள்ள அல்டார் குடியரசு பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (16) காலை 8.48 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம், 6.4 ரிச்டர் அளவுகோலில் பதிவாகி இருப்பதாக, ரஷ்யப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. அண்டை பகுதிகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

இருப்பினும், சில இடங்களில் கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாகவும், பொது நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை இரத்து செய்யப்பட்டு, சேதங்களைச் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# சமநிலையில் மட்ரிட் - ஒஸஸூனா போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், ஒஸஸூனாவின் மைதானத்தில் சனிக்கிழமை (15) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் சமப்படுத்தியது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிலியான் மப்பே பெற்றதோடு, ஒஸஸூனா சார்பாகப் பெறப்பட்ட கோலை அன்டே புடிமிர் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற செல்டா விகோவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் சமப்படுத்தியது. அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக்ஸான்டர் சொர்லொத் பெற்றதோடு, விகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை லாகோ அஸ்பஸ் பெற்றிருந்தார்.

இந்நிலையில், வில்லாறியலின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(16) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் வலென்சியா சமப்படுத்தியது.



லா லிகா புள்ளிகள் பட்டியலில் 51 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் உள்ளது. 50 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 48 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பார்சிலோனாவும், 44 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோவும் காணப்படுகின்றது.

இதில் பார்சிலோனாவும், பில்பாவோவும் மற்றைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# லெய்செஸ்டரை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் சனிக்கிழமை(15) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் மிகேல் மெரினோ பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 57 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 47 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 44 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும் காணப்படுகின்றது. இதில் மற்றைய அணிகளை விட லிவர்பூல் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் அத்லாண்டா–கைகரி போட்டி

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (15) நடைபெற்ற கைகரியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா சமப்படுத்தியது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற நாப்போலியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் லேஸியோ சமப்படுத்தியது. லேஸியோ சார்பாக குஸ்டாவ் இஸக்ஸென், பூலாயி டியா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நாப்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜியாகொமோ றஸ்படோரி பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 56 புள்ளிகளுடன் நாப்போலி காணப்படுகின்றது. 54 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலனும், 51 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 46 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லேஸியோவும் காணப்படுகின்றன. இதில் மற்றைய அணிகளை விட இன்டர் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



# மூன்று மாத ஊக்கமருந்துத் தடையை ஏற்றுக் கொண்ட சின்னர்

உடனடியாக மூன்று மாத ஊக்கமருந்துத் தடையை உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரரான ஜனிக் சின்னர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

தடைக்காலம் தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வந்ததாக உலக ஊக்கமருந்துக்கெதிரான நிறுவகம் தெரிவித்ததைத் தொடர்ந்தே இத்தடையை இத்தாலியின் சின்னர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அந்தவகையில் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள பிரெஞ்சுப் பகிரங்கத் தொடருக்கு சின்னர் திரும்பக் கூடியதாகவுள்ளது.



ஜேர்மனிய பெண்டெலிஸ்கா தொடர்:

# வி.எ.ஃ.ப்.எல் போச்சிடம் தோற்ற டொட்டமுண்ட்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெலிஸ்கா தொடரில், வி.எஃப்.எல் போச்சுமின் மைதானத்தில் சனிக்கிழமை (15) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் பொரூசியா டொட்டமுண்ட் தோற்றது.

போச்சும் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜியோர்கொஸ் மஸூராஸ் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பயேர்ண் மியூனிச்சுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயெர் லெவர்குசன் சமப்படுத்தியது.

புண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 55 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் மியூனிச் உள்ளது. 47 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லெவர்குசனும், 39 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஐன்ரச்ட் பிராங்பேர்ட்டும், 37 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஆர்.பி லெய்ப்ஸிக்கும் காணப்படுகின்றது. இதில் பிராங்க்பேர்ட் மற்றைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 17, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.